# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

**விளம்பி வருடம் மார்கழி மாதம் 16–ஆம் நாள் டிசம்பர் மாதம் 31.12.2018ம் நாள் திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்**

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி பொறியாளர் (ம) ஆணையர்(பொ) அவர்களின் அக்டோபர், நவம்பர்–2018ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 155<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண்–2** | அறந்தாங்கி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கான வால்வுகளில் ஏற்படும் தேய்மானங்களை அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்யவும், பகிர்மானக் குழாய்கள் பதித்தல் மற்றும் பகிர்மான குாய்களில் ஏற்படும் அடைப்புகள் மற்றும் நீர்க்கசிவுகளை சரிசெய்யவும் UPVC காலம் பைப் மற்றும் ஆழ்குழாய் கிணறு சுத்தம் செய்யுவும் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதியும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு:–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>3. குடிநீர் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 7524/2018/இ1) | **தீர்மான எண்:–** 156<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண்–3</u>** | அறந்தாங்கி நகராட்சிகுட்பட்ட பகுதிகளில் 16.11.2018ம் தேதி கஜாபுயல் ஏற்பட்டு நகர் முழுவதும் மிகப்பெரிய பாதிப்பு ஏற்பட்டது மேலும் அதன் தொடர்ச்சியாக மழை பெய்து வந்த நிலையில் நகரின் பல பகுதிகளில் கழிவறைகள் மற்றும் கழிவறை மேற் கூரைகள் மரங்கள் விழுந்தும், புயல் காற்றில் வீசி எரியப்பட்டும், நீர் தேக்க பிளாஸ்டிக் தொட்டிகள் பழுதடைந்தும், நீர் கொண்டு செல்லும் குழாய்கள், மின் விளக்குகள், மின் உபகரணங்கள் பழுதடைந்து கழிவறைகள் பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் அலுவலம் எதிரில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் வாகனங்கள் கழுவிட மற்றும் கிரீஸ் அடிக்க மற்றும் வாகன பராமரிப்பு உபகரணங்கள் நிறுவிடவும், மேற்படி பழுதுகளை சரி செய்ய அனுமதியும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>3. கழிவறைகளின் பயன்பாட்டின் அவசர அவசியத்தினை கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண். 00128/2019/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 157<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண்–4</u>** | மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கொள்கை அறிவிப்பில் அனைத்து நகராட்சி பகுதிகளிலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (R.O. Water ) CSR நிதி மூலம் அமைக்கப்படும் என தெரிவித்தார்கள். அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் மேற்கண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கொள்கை அறிவிப்பின்படி பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டது.<br>அதனடிப்படையில் தற்பொழுது முதற்கட்டமாக இந்நகராட்சிக்குட்பட்ட ஒரு இடத்தில் (கோபாலசமுத்திரம் நீரேற்று நிலைய வளாகத்தில்) சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அமைப்பு (ATM Water Machine with R.O. System ) அமைப்பதற்கும் அதனைத் தொடர்ந்து பத்து ஆண்டுகள் இயக்கி பராமரிப்பு செய்திட தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து Expression of Interest (EOI) பெறுவதற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.130 நாள்.19.09.2018ன் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி 26 வார்டுகளில் (வார்டு எண்.15 நீங்கலாக ) தலா ஒரு இடத்தில் மேற்படி இயந்திரம் நிர்மானம் செய்து பராமரிக்கும் பணிக்கு 04.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் கீழ்கண்ட விலை விபரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. | **<u>தீர்மான எண்:–</u>** 158<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3 அனுமதிக்கப்பட்டது |

| Sl.No. | Item Description | Quantity | Units | BASIC RATE |
|---|---|---|---|---|
| 1 | 2 | 4 | 5 | 6 |
| 1 | Establishment of 1000 Ltr./Hr. capacity community drinking water system through Reverse Osmosis with UV treatment in Mayiladuthurai Municipality under PPP mode. Rate to be remitted to the Municipality (Rupees per 20 Ltr.) | 20.00 | Liters | 1.0000 |
| 1.1 | Rate to be charged for sale to public (Rupees per 20 Ltr.) | 20.00 | Liters | 6.9000 |
| 1.2 | Rate be charged for sale to public (Rupees per 1 Ltr from chilling machine) | 1.00 | Liter | 1.0000 |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியான M/S. Dharana Infrastructure Project Pvt. Ltd., Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/S. Dharana Infrastructure Project Pvt. Ltd., Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திவு வழங்கவும் அனுமதிக்கலாம்.
3. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நகராட்சிக்கு ரூ.1.00 / 20 லிட்டர் பொதுமக்களுக்கு ரூ.6.90 / 20 லிட்டர் குளிர்ந்த நீர் ரூ.1.00 என்று உள்ளதனை ஏற்கலாம்.

**<u>பொருள் எண்–5</u>**

அறந்தாங்கி நகராட்சி கலவை உரக்கிடங்கிற்கு 3 காவலர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள்–3 ஜே.சி.பி. ஓட்டுநர் –1 ஆகியோரை அமர்த்தி ஒராண்டுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோர இந்நகர் மன்ற தீர்மான எண்: நாள்:31.10.2018ன் படி அனுமதிக்கபட்டுள்ளது. அதன் படி 28.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு திறந்து ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டுள்ளவாறு.

**<u>தீர்மான எண்:–</u>** 159
**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1,2,3,4,5 அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை | | | | ரெல்யான் பெசிலிட்டி சர்வீஸஸ் பிரைவேட் லிட்., சென்னை | | | | டிரஸ்டஸ் அவுட்சோர்சிங் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிட்., சென்னை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நாள் ஒன்றுக்கு | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் சேர்த்து | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் சேர்த்து மொத்த தொகை | மொத்த தொகை | நாள் ஒன்றுக்கு | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் நீங்கலாக | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் நீங்கலாக மொத்த தொகை | மொத்த தொகை | நாள் ஒன்றுக்கு | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் நீங்கலாக | தொழிலாளர் வைப்புநிதி 25.61 சதவீதம் நீங்கலாக மொத்த தொகை | மொத்த தொகை |
| 1 | ஜே.சி.பி. ஓட்டுநர் | 556 | 698.39 | 254912.93 | 202940 | 768 | 571.31 | 208530 | 280320 | 755 | 561.64 | 205000 | 275575 |
| 2 | ஓட்டுநர் –3 நபர்கள் | 1392 | 1748.49 | 638199.28 | 508080 | 1950 | 1450.60 | 529470 | 711750 | 1893 | 1408.20 | 513994 | 690945 |
| 3 | காவலர் – 3 நபர்கள் | 723 | 908.16 | 331478.50 | 263895 | 1110 | 825.72 | 301391 | 405150 | 1074 | 798.94 | 291616 | 392010 |
| | காப்பீட்டுத் தொகை 1500*7 | | | 10500 | 10500 | | | | | | | | |
| | நிர்வாக செலவினம் | | | 133508 | 97492 | | | | | | | | |
| | | | | 1368598.73 | 1082907 | | | 1039392 | 1397220 | | | 1010610 | 1358530 |
| | | | | | | | | 43515 | 28621. | | | 72297 | 10068.7 |
| | | | | | | | | 4.02 | 2.09 | | | 5.17 | 0.74 |
| | | | | | | | | Above | Above | | | Less | Less |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Trustus out sourcing solution private Ltd, Chennai Aranthangi நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி (0.74 சதவீதம் குறைவு) கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:—</u>**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்படி பணிக்கு Trustus out sourcing solution private Ltd, Chennai நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.74 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.

3. மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் நகராட்சி மதிப்பீட்டில் தொழிலாளர் சேம நலநிதி தொகை சேர்க்கப்படவில்லை. ஆனால் ஒப்பந்தத்தில் தொழிலாளர் சேம நலநிதி சேர்த்து குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து பொது சுகாதாரப்பணி மற்றும் பணியாளர்களின் நலன் கருதி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

4. மேற்காணும் பணிகளுக்கான கூடுதல் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

5.பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1222,2017,எச்1)

**<u>பொருள் எண்—6</u>**

இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு—15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | முகவரி | விபரம் | செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1. | எஸ். அருண்மொழி, சக்திவேல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், அறந்தாங்கி | வார்டு எண்.16 மற்றும் வார்டு எண்.18ல் பழுது பட்டுள்ள 1 எச்.பி. மினிபவர் பம்ப் மோட்டார் பழுது நீக்கம் செய்தவகையில் உண்டான செலவினம் | 9810.00 |
| 2 | வி.சுகுமாறன், ஜீவா ஆடியோஸ் ஜெனரேட்டர் சர்வீஸ், அறந்தாங்கி | அறந்தாங்கி நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள 30 கே.வி.ஏ. ஜெனரேட்டர் பழுது நீக்கம் செய்த வகையில் உண்டான செலவினம் | 16000.00 |

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

பதிவு செய்யலாம்

**<u>தீர்மான எண்:—</u>** 160

**<u>தீர்மானம்:—</u>** பதிவு செய்யப்பட்டது

| | | |
|---|---|---|
| **பொருள் எண்—7** | இந்நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2013-2014 மற்றும் 2014-2015ஆம் ஆண்டிற்குரிய சேவைவரி கட்டணம் ரூ.90197/- செலுத்த கோரி குத்தகைதாரர் திரு.சு.சந்திரமோகன் அவர்களுக்கு வணிகவரி அலுவலகம் திருச்சி அவர்களின் 7.1.2013 அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து குத்தகைதாரர் திரு. சு.சந்திரமோகன் அவர்களால் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கியைில் W.P (MD).10558/2013 மற்றும் W.P (MD).10559/2013-ல் உதவி ஆணையர் வணிகவரி அலுவலர் திருச்சி மற்றும் ஆணையர் அறந்தாங்கி அவர்களின் மீது வழக்கு தொடர்த்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.S.சதீஷ்குமார் முன்னாள் கூடுதல் அரசு வழக்கறிஞர் மதுரை அவர்கள் ஆஜராகி வழக்கினை நடத்தி வருகிறார். மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக வழக்கு ஒன்றுக்கு ரூ.9500/- இரண்டு வழக்கிற்கு ரூ.19000/-(ரூபாய் பத்தொன்பதாயிரம் மட்டும்) திரு.S.சதீஷ்குமார் முன்னாள் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>1) மன்ற அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்படி வழக்கிற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்காலம் (ந.க.எண்7063/2018/அ1) | **தீர்மான எண்:—** 161<br>**தீர்மானம்:—** அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |

**ஓம்/—நை.மீரா அலி**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**